

கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்டக் கழகச் செயலாளர் அ.கதிரேசன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு 1002 நபர்களுக்கு நல உதவிகளை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழங்கியதுடன் மூன்று கழக முன்னோடிகளுக்கு மூன்று சக்கர வாகனங்களையும் வழங்கினார். உடன் ஏ. எம். வி. பிரபாகராஜா எம்.எல்.ஏ., கணக்கு மற்றும் மண்டல குழு தலைவர் க.தனசேகரன், பகுதிச் செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா மற்றும் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜன், வாசுகிபாண்டியன், ரத்னா லோகேஷ் எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள் நிஷாசையத், சசிகுமார் வட்டச் செயலாளர்கள் சதீஷ் கண்ணன், செந்தில்குமார், பூக்கடை பழனிச்சாமி, ஜம்பு முருகன் மற்றும் திரளாக மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையர்மலை வட்டம், மூவரசம்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளியில் விடுமுறை முடிந்து பள்ளிக்கு திரும்பும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா நோட்டு புத்தகங்கள், பாட புத்தகங்கள், சீருடைகள், புத்தகப்பை, எழுது பொருள்கள் ஆகியவற்றை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். இதில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், புனித தோமையர்மலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, ஒன்றிய குழு துணைத் தலைவர் பிரசாத், வட்டச் செயலாளர் ஜெ.நடராஜன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## ஆலந்தூர், மூவரசம்பட்டு, அரசு பள்ளி மாணவர்களுக்கு சீருடை, பாடப்புத்தகங்கள்!

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார்!

ஆலந்தூர், ஜுன் 5-

ஆலந்தூர், மூவசரம்பட்டு ஆகிய பகுதிகளில் கடந்த 2ம் தேதி பள்ளிகள் திறக்கப்பட்ட முதல் நாளிலேயே அனைத்து அரசு பள்ளி மாணவ-மாணவிகளுக்கும் விலையில்லா பாடப்புத்தகம், சீருடை மற்றும் நோட்டு புத்தகங்களை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.

மூவரசம்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ- மாணவிகளுக்கு கடந்த 2ம் தேதி விலையில்லா பாட புத்தகங்கள். சீருடை, நோட்டு புத்தகங் கள், புத்தக பை போன்றவை வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவுக்கு செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ச.அருண்ராஜ் தலைமை தாங்கினார். ஆலந்தூர் மண்டல குழு தலைவர் என்.சந்திரன், ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் பா.பிரசாத். மூவரசன் பட்டு ஊராட்சி மன்ற தலைவர் ஜி.கே.ரவி, துணை தலைவர் எம்.பி.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கற்பகம் வரவேற்றார். இதில் அமைச்சர் தா.மோ. அன்பரசன், கலெக்டர் ச. அருண்ராஜ் ஆகியோர் மாணவ- மாணவிகளுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள், சீருடை, நோட்டு புத்தகங்கள் மற்றும் புத்தக பைகளை வழங்கினர்.

இதைத் தொடர்ந்து, ஆலந்தூர் 160வது வார்டுக்கு உட்பட்ட ஜால் தெருவில் உள்ள அரசு பள்ளியில் படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு அமைச் சர் தா.மோ.அன்பரசன் விலையில்லா பாடப் புத்தகங்கள், சீருடை மற்றும் நோட்டு புத்தகங்களை வழங்கினார்.

இதில் கவுன் சிலர்கள் பிருந்தாஸ்ரீ முரளி கிருஷ்ணன், சாலமோன், வட்ட செயலாளர்கள் கே.பி.முரளிகிருஷ்ணன், சீனிவாசன், ஜெ.நடராஜன், கே.ஆர். ஜெகதீஸ்வரன் மற்றும் ஜி.கே.வி. அன்பு பிரபாகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர் பாபு தலைமை !

## எழும்பூர் டி.கே. சங்கர்- எம்.கார்த்திகேயன் இல்ல மணவிழா!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தமது இல்லத்தில் நடத்தி வைக்கிறார்

சென்னை, ஜுன்.5,

எழும்பூர் பகுதி பிரதிநிதி டி.கே.சங்கர் - எஸ்.அனுசுயா ஆகியோரின் புதல்வர் டி.கே. எஸ்.சூர்யா, எம்.கார்த்திகேயன்கே.கலைவாணி ஆகியோரின் புதல்வி எம்.கே. நிலா ஆகியோரின் மணவிழா 8.6.2025ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணிக்கு சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முதல்வர் அவர்கள் இல்லத்தில் நடைபெறுகின்றது. மணவிழாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை யேற்று நடத்தி வைத்து மண மக்களை வாழ்த்துகிறார்.

அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி 9.6.2025திங்கள் கிழமை அன்று மாலை 9 மணிக்கு கொசப்பேட்டையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெறுகின்றது. மணவிழா வரவேற்பிற்கு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர் பாபு தலைமை வகித்து மணமக்கள் டி.கே.எஸ். சூர்யாஎம்.கே. நிலா ஆகியோரை வாழ்த்துகிறார்.



மேலும்,மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி., இ, பரந்தாமன் எம்.எல்.ஏ., கே.எஸ்.இரவிச்சந்திரன், எஸ்.முரளி, சொ.வேலு, எஸ்.ராஜசேகர், பி.எச். யாழினி, வி.சுதாகர், ராஜேஷ்வரி ஸ்ரீதர், எம்.விஜயகுமார், ப.ஸ்ரீராமுலு, பரிதி இளம்சுருதி, ராஜேஷ் ஜெயின், சுமதி புத்தநேசன், ஜி.ராமமூர்த்தி, ஒய்.அபாய், ப.ஜெகதீஷ், ஆர்.டி.சங்கர் நானா, பா.அண்ணாதுரை, பா .கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், மா.ஜெய்சங்கர், டி.சதீஷ்குமார், சேப்பாக்கம் வே.ப.பிரபாகரன், சு.மனோகர், டி.தயாளன்,ந.பாலு,சி.சேகர், ஆர்.எம். ரங்கநாதன், டி.கே. கலைவாணன், ஜி.ராஜாத்தி, டி.கே. தமிழ்வாணன், மு.கு.சு. மோசஸ், டபிள்யூ. பொன்மொழி, டி.கே.எஸ்.பிரபாகரன், எஸ்.கார்த்திக், டாக்டர் கே.கோகுலக்கிருஷ்ணன், டி.ஆர்.குமார், எம். பார்த்திபன், என்.முருகன், முனுசாமி, கே.நாகராஜ், மோகன், எம். சீனிவாசன், மணிவண்ணன், எம்.மணிமொழி,வினோத்குமார், கர்ணா, ராமச்சந்திரன், தினகரன், பி.சந்திரசேகர், பி.ராஜசேகர், ஐ.சுமன்,எல். அஜித், ஐ.விஜய், என்.ராம்கி, நித்யானந்தன், இ.ஜெயபிரகாஷ், பி. கவிதாசன், ஐ. வெங்கடேசன், முரளிகிரு ஷ்ணன்,கலையரசன், எம்.தமிழரசு,ஸ்ரீராம், னேஷ்குமார், பிரதீப்குமார், எஸ்.கேத்தீஸ், ஆகாஷ், கௌதம், கௌசிக், அரிபிரசாத்,தேவபிரசாத், பிரத்விக், சமயத்தா, விக்ரம்,கே.கிருத்விக், சித்தார்த், பி.மகிழினி, ராகுல், ஐ.வரிஷித்,வி.ராஜா, பன்னீர்செல்வம், சுப்புராயண், கா.கோ. கோமகன் தன.பிரபாகரன், ஆதி அசோக்,முத்து,ரவிச்சந்திரன், பலராமன்,பாளையம், பன்னீர்செல்வம், மாஸ்டர் நாதன்லி மற்றும் பலர் கலந்து கொண்டுமண மக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழா வரவேற்பிற்கு வருகைதருவோரை சென்னை கிழக்கு மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி அனைவரையும் வரவேற்கிறார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## திருவொற்றியூர் 9-வது வட்டத்தில் நல உதவிகள்!

### தி.மு.தனியரசு வழங்கினார்! குறிஞ்சி எஸ்.கணேசன் ஏற்பாட்டில்!

சென்னை, ஜுன் 5 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி ஒன்பதாவது வட்டம் நடபாய் தோட்டம் அருகில் கலைஞர் சிலைக்கு திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி மு தனியரசு மாலை அணிவித்து இனிப்புடன் கூடிய காலை சிற்றுண்டி சுமார் 500 நபர்களுக்கு வழங்கி நல உதவிகள் வழங்கினார்.

மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன் ஏற்பாட்டில் பகுதி அவை தலைவர் ஆர்.சி. ஆசைத் தம்பி, எம்.வி.குமார், கே. பிரபாவதி, இரா. குமரேசன், பி.சாந்தி, பக்தன், வட்ட செயலாளர் எம்.எல். சரவணன், மாவட்ட பிரதிநிதிகள் வி.பழனிவேல், பி.எஸ். சைலஸ், ஒய்.நந்திவர்மன், எஸ்.கண்ணையன், ஈ. திருஞானம், கே.ஆர்.எஸ். செந்தில், ராஜா, கா.சினி, கண்ணன், கே.ஆர்.சி. ஜெயக்குமார், ராஜா, எஸ். பிரகாஷ், அவினாஷ், பி.உதயகுமார், பி.குணசேகரன் உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### கழக துணை பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்பி பங்கேற்கிறார்

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமை! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி- வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில்

## திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருத்தணி மற்றும் திருவள்ளூர் ஆகிய தொகுதிகளின் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருத்தணி , திருவள்ளூர் ஆகிய சட்ட மன்ற தொகுதிகளின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்

| சட்டமன்றத் தொகுதி | நாள் நேரம் | இடம் |
|---|---|---|
| **திருத்தணி** | **05-06-2025 மதியம் 2 மணி** | **GRT ரெசிடென்சி திருத்தணி சென்னை தேசிய நெடுஞ்சாலை** |
| **திருவள்ளூர்** | **05-06-2025 மாலை 3. மணி** | **ஹோட்டல் பெரம்பூர் சீனிவாசா திருவள்ளூர்** |

மேற்கண்ட கலந்துரையாடல் கூட்டத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டதிற்குட்பட்ட மாநில நிர்வாகிகள். மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு/பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், அவரவர் உள்ளடங்கிய சட்டமன்ற தொகுதியின் கலந்துரையாடல் கூட்டத்திற்கு (மேலே குறிப்பிட்டுள்ள நிர்வாகிகள் மட்டும்) தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து**

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



துறைமுகம் மேற்குப் பகுதி, 59 அ வட்ட திமுக சார்பில், வட்டக் கழக செயலாளர் சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் தலைமையில், பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் நடைபெற்ற விழாவில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்,மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு, கழகக் கொடியேற்றி, வட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி, பொதுமக்களுக்கு உணவு வழங்கினார்.

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## மாதவரம் வடக்கு பகுதி சார்பில் செம்மொழி நாள் கொண்டாட்டம்!

### கே. அங்குசாமி தலைமையில் மாணவர்களுக்கு நல உதவிகள்

சென்னை, ஜுன் 5 -

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜுன் 3 செம்மொழி நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு, பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், 15 வது வட்டம் பொன்னேரி சட்டமன்றத் தொகுதி பழையநாபாளையம் பகுதியில் அமைந்துள்ள, சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் படிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு 15வது வட்டச் செயலாளர் கே. அங்குசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாணவ, மாணவிகள் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞரின் பிறந்தநாள் விழா கேக்கினை வெட்டி அனைவருக்கும் வழங்கி மகிழுந்தனர். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், பென்சில், பேனா, ரப்பர் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளுடன் இனிப்பும் வழங்கப் பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பதினைந்தாவது வட்டக் கழக நிர்வாகிகள் பி.டி. ரவிச்சந்திரன், மாவட்ட இலக்கிய அணி நிர்வாகி முகமது வசீம், மாவட்ட பிரதிநிதி செல்வம், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபால கிருஷ்ணன், வட்ட நிர்வாகிகள் பக்தவச்சலம், கண்ணன், பாலாஜி, எல்லமுத்து ,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ. விஜயன், பழையனபாளையம் புஷ்பராஜ், தசரதன், கே.சபரீசன், ரமேஷ், குணசேகரன், நேசரவி,டென்னிஸ், வக்கீல் டி. டில்லி, விஜயகுமார், பாலன், சாரங்கபாணி, ஏசுராஜ்,எல்லமுத்து, சுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை புழல் எம்.நாராயணன் செய்திருந்தார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு திரு.வி.க.நகர் வடக்கு பகுதி, 74 வது வட்ட தி.மு.க. சார்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி வட்ட கழக செயலாளர் எஸ்.புஷ்பராஜ் தலைமையில் ஏகாங்கிபுரம் 1 வது தெரு கழக கல்வெட்டு அருகில் மேயர் பிரியா ராஜன் கழகக் கொடியேற்றி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் பகுதி துணை செயலாளர் பெரம்பூர் ஆர்.ராஜன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 பிறந்தநாள் முன்னிட்டு 1வது வார்டு திமுக சார்பில் வட்டக் கழகச் செயலாளர் மு.சிவக்குமார் எம்.சி., ஏற்பாட்டில் எண்ணூர் தாழங்குப்பத்தில் நலத்திட்ட உதவிகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் 500 பொதுமக்களுக்கு அசைவ அறுச்சுவை உணவை மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., வழங்கினார். உடன் 1வது மண்டல குழு தலைவர் பகுதிக் கழகச் செயலாளர்கள் தி.மு.தனியரசு, வை.ம.அருள்தாசன், ந.திருநங்கு, யு.எஸ்.குறளரசன், லைன். தியாகராஜன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் மற்றும் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் பிறந்த நாள்: திரு.வி.க.நகர் தெற்குப் பகுதி

## 76 ‘அ’ வட்டத்தில் பொதுமக்களுக்கு இனிப்பு!

### பகுதி பிரதிநிதி பி.வினோத் ஏற்பாட்டில் வழங்கல்!

சென்னை, ஜுன் 5 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, கழக துணை அமைப்பு செயலாளர், வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி, திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76 வது வார்டு மாமன்ற உறுப்பினர் தமிழ்செல்வி சசிகுமார், 76 வது வட்டக்கழக செயலாளர் எஸ்.சசிகுமார் தலைமையில் மாவட்ட பிரதிநிதி கி.நாகலிங்கம், 76 ( அ ) வட்ட துணை செயலாளர் சத்யா நாகலிங்கம் ஆகியோர் முன்னிலையில் பகுதி பிரதிநிதி பி.வினோத் ஏற்பாட்டில் பகுதி 76 (அ) வட்டத்திற்கு உட்பட்ட கே.எம். கார்டன், பகுதி 1வது தெரு, அம்பேத்கர் மன்றம் அருகில் அப்பகுதி வாழ் மக்களுக்கும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

இந்நிகழ்வில் கொருக்குப் பேட்டை இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜோதி, பி.மணிமாறன், எம்.விமல்ராஜ் , டி.கார்த்திக், ஏ.கமல், கே.சஞ்சய் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் கிழக்கு பகுதி ஒன்பதாவது வட்டம் நடபாய் தோட்டம் அருகில் கலைஞர் சிலைக்கு திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு. தனியரசு மாலை அணிவித்து இனிப்புடன் கூடிய காலை சிற்றுண்டி சுமார் 500 நபர்களுக்கு வழங்கி நலஉதவிகள் வழங்கினார். நிகழ்ச்சி ஏற்பாட்டினை குறிஞ்சி எஸ்.கணேசன் செய்திருந்தார். நிகழ்ச்சியில் ஆர். சி.ஆசைத்தம்பி, எம்.வி.குமார், கே. பிரபாவதி, இரா.குமரேசன், பி.சாந்தி பக்தன், வட்ட செயலாளர் எம்.எல்.சரவணன், வி.பழனிவேல், பி.எஸ்.சைலஸ் , ஒய். நந்திவர்மன், எஸ்.கண்ணையன், ஈ.திருஞானம், கே.ஆர்.எஸ். செந்தில் ராஜா, கா. சீனி கண்ணன், கே.ஆர்.சி.ஜெயக்குமார், ராஜா, எஸ்.பிரகாஷ், அவினாஷ், பி. உதயகுமார், பி.குணசேகரன் உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் தலைமையில், 35 வது வட்டத்தில் பகுதிச் செயலாளர் அ.முருகன், வட்டச் செயலாளர் எம். உமாபதி ஆகியோர் முன்னிலையில் மாவட்டப் பிரதிநிதி இ.சையத் அலிகான் ஏற்பாட்டில் பொதுமக்கள் மற்றும் பால்வாடி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் ஜியாவுதீன், பி.செல்வராஜ், இ.சல்மான், ஐ.பிரதீப், வி. செல்வமணி, ஜெயக்குமார், இ.ரமேஷ், அ.சேக் அப்துல்லா, பரிதா பேகம், ஆசிரியர் அய்யனார், மேரி, சண்முகம், சங்கர், முகிலன், அ.இக்பால், அ.சாதிக் வாகிதா உமர், நாசர் கான், பழக்கடை ஆயிசா, தௌபிக், ஆனந்த், ஜெயச்சந்திரன், தினேஷ்குமார், பிரபு, சந்திரசேகர், பாலசுந்தரம், ஜாகிர் உசேன், இம்ரான், இர்பான், சுமையா பேகம், பர்வீன், ஜெயா, அசன், முபீனா பேகம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.